09.09.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.164 /2020 ) திரு.ரெங்கசாமி.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை வரவில்லை என்றால சரிதான். சாட்சியம் அளிக்க என்னை வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதியின் கணவர் பெயர் என்னவென்றால் தனுஷ்கோடி. அவரது மாமனார் பெயர் என்னவென்றால் சினி நாயக்கர். எனது அப்பா பெயர் என்னவென்றால் சங்கவ நாயக்கர். வாதியின் மாமனாரும், எனது அப்பாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். வாதி எனக்கு மருமகள் முறை வேண்டுமென்றால் சரிதான். வழக்கு போட வாதி சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளாாகள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். வழக்கில் என்ன என்ன சங்கதிகள் உள்ளது என்று தெரியாது என்றால தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் அதில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது என்ற விவரமும் பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சங்கதி சொல்லியுள்ளார் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரமும் தெரியாது என்றால தெரியும். தபசில சொததின் சர்வே எண். நான்கு மால்கள் விவரம் விஸ்தீரணம் எனக்குதெரியாது என்றால் தெரியும். வழக்கு சொத்து அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை வழக்கு சொத்தை நான் தான் வாங்கிக்கொடுத்தேன். வாதியின் நிலம் தெற்கு பக்கமும், பிரதிவாதியின் நிலம் வடக்கு பக்கமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி கருப்பசாமியின் நிலத்திற்கு வடக்கு பக்கம் கிழமேலாக மெயின்ரோடு செல்கிறது என்றால் ஆமாம். வாதி,பிரதிவாதியின் நிலத்திற்கு வடக்கு பக்கம் தென்வடலாக ஓடை செல்கிறது என்றால் சரிதான்.

2) ஓடையில் இரண்டு பக்கமும் கரை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் நிலத்திற்கு பின் பக்கம் தெற்கு பக்கம் உள்ள நிலத்துக்காரர்கள் கரை வழியாகத்தான் போவார்கள் என்றால் செல்லமாட்டார்கள் பாதைக்கு என்று எழுதிக்கொடுத்த பாதை வழியாக செல்வார்கள். வாதி நிலத்திற்கு பின்னாடி உள்ள நிலத்து காரர்களுக்கு பாதை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்ய வாதி தயாராக உள்ளார் என்றால் சரி. எங்கள் ஊரின் மெயின் ரோட்டிற்கு

தெற்கு பக்கம் குளம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த குளத்தை ஒட்டி தென்வடலாக பாதை சென்று சுடுகாடு வரை செல்கிறது என்றால் சரிதான். தென்வடலாக செல்லும் ரோடு தார் ரோடு என்றால் மண் பாதை. ரோடு தெற்கு போய் கிழக்கு திரும்பி வாதியின் நிலத்து வரை செல்கிறது என்றாலும் ஓடைவரை செல்கிறது என்றால் இல்லை செல்லவில்லை. பிரதிவாதி கருப்பசாமி புஞ்சை சதுரவடிவில் உள்ள புஞ்சை என்றால் சரிதான். வாதியின் நிலத்தில் மையப் பகுதியில் தூர்ந்து போன கிணறு உள்ளது என்றால் சரிதான். கிணற்றை சுற்றியும் வாதி தற்போது வரை விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். கிணற்றை சுற்றி பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம்.

3) பிரதிவாதி நிலத்தை கிரையம் பெற்றதிலிருந்து தற்போது வரை விவசாயம் செய்து வருகிறார் என்றால் ஆமாம். பிரதிவாதியின் இடத்தில் நடந்துசென்ற தடம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு தடை உள்ளதை காட்டக்கூடிய புகைப்படத்தை தாக்கல் செய்ய வாதி தயாராக உள்ளாரா என்றால் உள்ளார். பிரதிவாதியின் நிலத்தில் ஆள்கள், வண்டி போனதற்கான அடையாளம் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்தை மாரிஸ்வரிபாண்டியிடமிருந்து 2019 ஆம் ஆண்டு கிரையம் பெற்று அன்றைய தினத்திலிருந்து விவசயாம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மாரீஸ்வரிபாண்டி எப்படி விவசாயம் செய்து வருகிறோரா அதே போன்றுதான் வாதியும் விவசாயம் செய்து வருகிறார் எனறால் சரிதான் எங்களது பாதையை அடைத்துவிட்டு விவசாயம்செய்து வருகிறார். வாதி கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 பத்திரத்தில் பிரதிவாதி பாதை பாத்தியம் கோரும் தென்வடல், கிழமேல் பற்றி தெரியாது என்றால் தெரியும். அவ்வாறு பாதை பாத்தியம் இருப்பதை பற்றி வருவாய் ஆவணத்தை வாதி தாக்கல் செய்ய தயராக உள்ளாரா என்றால் சரிதான். வாதியும், நானும் முக்கூட்டுமலை கிராமத்தில தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். பிரதிவாதி வெளியூரில் குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். நானும் பிரதிவாதியும் வேறு வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதியின் நிலத்திற்கு கிழக்கே வேறு நிலங்களை பிரதிவாதி கிரையம் பெற்று 5 வருடத்திற்கு முன்பிருந்து தற்போது வரை பட்டாசு தொழிற்சாலை நடத்தி வருகிறார் என்றால் ஆமாம். 6 மாதத்திற்கு முன்பு பிரதிவாதி அவரது நிலத்தில் பெட்ரோல் பல்க் மற்றும் டீ கடையும் நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

4) வெளியூர்காரான பிரதிவாதி எங்கள் ஊரில் வந்து தொழில் செய்து வசதியாக வாழ்ந்து வருகிறார் எனறால் சரிதான். வாதி பாதை சம்பந்தமாக பிரதிவாதியிடம் நான்போய் எதுவும் பேசிக்கொள்ளவில்லை என்றால் பேசவில்லை. பிரதிவாதி கியைரம் பெற்ற முன்பாத்தியஸ்தரும் வாதிக்கு கிரையம் கொடுத்த முன்கிரையதாராரும்,ஒரே நபரிடமிருந்து என்றால் சரிதான். பிரதிவாதி கருப்பசாமி முன் பாத்தியஸ்தர் பத்திரத்தில் பாதை குறிப்பிடப்படவில்லை என்றால் அந்த பத்திரத்தை நாங்கள் பார்க்கவில்லை. அந்த பத்திரத்தில் பாதை எதுவும் குறிப்பிடவில்லை அதனால் தான் நான் பார்க்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து ஆணையர் நியமித்து தாவா இடத்தை பார்வையிட்டால் தாவா இடத்தில் உள்ள பிரதிவாதியின் அமைவிடம்,தென்வடல் ரோடு, கால்வாய், கரை, ஓடை உள்ள விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வாதி இடத்தை அளக்க வேண்டி சர்வேயருக்கு படிக்கட்டி காவல்நிலையம் சென்ற விவரம் எனக்குதெரியாது என்றால் தெரியும். காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வாதியுடன் நான் சென்றியிருந்தேனா என்றால் போனேன். காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்களா சாட்சிகையொப்பம் போட்டேனா என்றால் என்னை விசாரித்தார்கள், சாட்சி கையெழுத்து போடவில்லை. பொதுவாக விவசாய நிலத்தில் மத்தியில்பாதை கேட்டால் யாரும் பாதை கொடுக்கமாட்டார்கள் என்றும் ஓரத்தில் தான் பாதை கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஓடை கரையை ஒட்டி தென்வடலாக பிரதிவாதி, வாதிக்கு பாதை தருவதாக சொல்லி வருவதை வாதி கேட்க மறுத்து வருகிறார் என்றால் அது ஒரு கிலோ மீட்டர் துாரம் சுற்றி வரவேண்டும்.

5) ஒரு கிலோ மீட்டர் துாரம் சுற்றி வருவதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. நான் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டதில் பாதை விவரம் சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. அமைவிடத்திலும் பாதை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி பத்திரத்திலும் முன் பத்திரத்திலும் பாதை விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதி நிலத்தில பாதையாக பயன்படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. வாதி நிலத்திற்கு ஓடை வழியாகவும், குளத்துக்கரை வழியாகவும் பாதை உள்ளது என்றால் சரியல்ல. வெளியூர்காரான பிரதிவாதி எங்கள் ஊரில் வந்து தொழில் செய்து நல்ல வசதியாக வாழ்ந்து வருவதால் வாதி அவர்மீது பொறாமை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

வாதி எனது மருமகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.09.2025.